முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.27.01.2026

O.S No.. 84/2015

பிவா.சா.1-ஆண்டனி லாரன்ஸ்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

வழக்கு சொத்து ஒழிப்பித்து கிடைக்கவேண்டும் என்று நான் அறிவிப்பு செய்தேனா என்றால் இல்லை. அதேபோல் எனது அப்பாவும் ஒழிப்பிக்க அறிவிப்பு செய்தாரா என்றால் இல்லை. நான் எனது அப்பா உயிருடன் இருக்கும் போது அவருடன் வசித்து வந்தேனா என்றால் சரி. எனத அப்பாவிடம் ஒழிப்பிக்க அறிவிப்பு செய்தாரா என்று நான் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. எதிர் கோருறுரிமை வழக்கு தாக்கல் செய்ய வழக்கு மூல தேதி என்ன என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி.

நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சொத்தை ஒழிப்பிக்கவும், மீச்ச வருமானம் மாதத்திற்கு தலா ரூ.2 ஆயிரம் கேட்டுள்ளேன். என்ன தேதியிலிருந்து கேட்டுள்ளேன் என்றால் நான் தாக்கல் செய்த வழக்கு நாளிலிருந்து கேட்டுள்ளேன். உண்மையில் நான் குறிப்பிட்டு கேட்கவில்லை என்றாலும் தற்போது புதிதாக ஒரு தேதியை சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதியை நான் என்னுடைய அனுமதியுடன் அனுபவம் செய்திருந்தால் நான் மீச்ச வருமானம் கேட்டிருக்கமாட்டேன் என்றாலும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

வாதி எந்த காலத்திலும் எனது அப்பாவிடமோ, என்னிடமோ அனுமதி பெற்று வழக்கு சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி பெயரிலுள்ள ரேசன் கார்டு, வாக்காளர் அட்டை, சிலிண்டர் இணைப்பு இவை அனைத்தும் பெறுவதற்கு எங்கள் அப்பா அனுமதித்தார் என்றால் சரியல்ல. 1997 ல் வாதி வழக்கு சொத்தில் அனுபவத்தில் வந்தவுடன் வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ய சொன்னார் என்றாலும் அதன்படி

அனைத்து ஆவணங்களிலும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பெயரை மாற்றம் செய்ததற்கு எனது அப்பா தடை தெரிவித்தாரா என்றால் எனக்கு தெரியாது. நான் மறுப்பு ஏதும் சொல்லவில்லை என்றால் ரேசன் கார்டு, வாக்காளர் அட்டை, சிலிண்டர் இணைப்பு ஆகியவற்றிற்கு மறுப்பு சொல்லவில்லை.

எனது அப்பா வாதியிடம் 6 இலட்சம் ரூபாய் பெற்றதாக சொல்லியிருப்பதை எனது அப்பாவிடம் நான் நேரடியாக கேட்டேன் என்றால் கேட்டேன். எந்த தொகையும் வாங்கவில்லை என்றும் அவ்வாறு சம்பவமே நடைபெறவில்லை என்றும் கூறினார். வழக்கு சொத்தின் மீதான உரிமை உயில் பிரகாரம் கேட்கிறேனா அல்லது செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி கேட்கிறேனா என்றால் முதலில் உயில் படியும் தற்போது செட்டில்மெண்ட் ஆவணத்தின் படியும் கேட்கிறேன்.

வாசாஆ 8 ஆவணத்தின் பிரகாரம் என்னுடைய உரிமையை சொல்லி வருகிறேன் என்றால் சரி. வழக்கு சொத்து வாசாஆ 8 ல் 1 வது ஐட்டமாக காட்டப்பட்டுள்ளது. வாசாஆ 8 ல் மொத்தம் 11 ஐட்ட சொத்துகள் உள்ளது. அதில் 1 ஐட்ட சொத்தில் நான் தாமசம் என்றால் சரி. அது எந்த ஐட்டம் என்றால் 6 வது ஐட்டம் ஆகும். மற்ற ஐட்ட சொத்துகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் சரி. வாடகைக்கு எனது அப்பா காலத்திலே விடப்பட்டது என்றாலும் தற்போது நான் அந்த வாடகை பணத்தை வசூலித்துவருகிறேன் என்றால் சரி.

எனது செட்டில்மெண்ட் பத்திரத்தில் வாசாஆ 8 படி நகராட்சியில் வரி விதிப்பு ஆவணத்தின் பெயர் மாற்றம் செய்தேன் என்றால் சரியல்ல. பட்டா போன்ற ஆவணங்கள் எங்கள் பெயருக்கு மாற்றம் செய்ய முடியாது . அதில் கோயில் பெயரில் டிரஸ்டின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும். செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொத்துகளின் மதிப்புகள் சொல்லப்படவில்லை என்றால் சரி. வாசாஆ 8 ஆவணத்தை டிரஸ்டில் கொடுத்து வைத்துக்கொண்டு தான் தரை வாடகையை என்னுடைய பெயருக்கு மாற்றினேன்

என்றால் சரி. வாசாஆ 8 ஆவணத்தை எழுத எனது அப்பா ஏற்பாடு செய்தார். வாசாஆ 8 எழுதும் போது எனது அப்பா சுகம் இல்லாமல் வீட்டில் இருந்தார் வெளியில் வரவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 8 ஆவணத்தில் உள்ள சொத்துகள் அனைத்தும் எனது அப்பா பெயரில் முதலில் இருந்தது என்றால் சரியல்ல. சில சொத்துகள் எனது அம்மா பெயரிலும் இருந்தது.

பதிவு செய்த உயில் இருக்கும் போது  வாசாஆ 8 ஆவணம் எழுதுவதற்கு என்ன காரணம் என்றால் சொத்துகளை மேம்படுத்த கூட்டாக எழுதிய உயிலை ரத்து செய்து வாசாஆ 8 ஏழுதப்பட்டது. உண்மையில் வாதிக்கு சொத்தை கொடுக்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் வாசாஆ 8 ஆசவணத்தை நான் உற்பத்தி செய்துள்ளேன்என்றாலும் அந்த தேதியில் எனத அப்பா எழுந்து நடமாடக்கூடிய நிலையிலே இல்லை என்றாலும் சரியல்ல . உயிலில் எனது அம்மா பெயருக்கு சொத்துகள் இருந்தாலும் அவர் பெயரிலே வைத்து சொத்துகளை மேம்படுத்தியிருக்கலாம் என்றாலும் வாசாஆ 8 போலியாக நானாக உற்பத்தி செய்த ஆவணம் என்றாலும் சரியல்ல.

எனது அப்பாவிற்கு கிடைத்த சொத்துகள் அனைத்தும் பதிவு செய்த ஆவணத்தின் மூலம் வந்தது என்றால் சரி. உண்மையில் சரியான முத்திரை செலுத்தாததால் பதிவு செய்யப்படாததால் ஆவணத்தின்மூலம் எந்த சொத்திற்கு உரிமையும், மூலத்தையும் மாற்றமுடியாது என்றாலும் சரியல்ல. வாதி திருமணம் ஆகும் வரை நாங்கள் அனைவரும் ஒரே வீட்டில் தாமசம் என்றால் சரி. திருமணம் ஆன பின்பு சென்னையில் குடும்பத்துடன் வாதி வசித்து வந்தார் என்றால் சரி. சென்னையில் வாதியின் மற்றும் வாதியின் கணவருக்கு சரியான தொழிலும், சரியான வருமானமும் அமையவில்லை என்றால் எனக்கு தெரியாது.

மேற்படி விவரம் எனது அப்பாவிற்கு தெரியும் என்றால் சரியல்ல. அவருக்கு தெரியாது. உண்மையில் மேற்படி விவரங்கள் எனக்கும் எனது அப்பாவிற்கும் தெரியயும்

என்றாலும் வழக்கிற்காக முரணாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அதனால் எனது அப்பா வாதியும் அவரது கணவரையும் இங்கு வரவைத்து தொழில் ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் சரியல்ல, 1997 ல் இங்கு வந்தபோது வாதி சிறுக சிறுக சேர்த்த 6 இலட்ச பணத்தை எனது அப்பாவிடம் கொடுத்து வழக்கு சொத்து மட்டும் அவர் பெயருக்கு மாற்றி எழுதி தர அவரது அப்பா ஒப்புகொண்டார் என்றால் சரியல்ல. வாதி குடும்பத்துடன் இங்கு வருவதற்கு முன்பு வழக்கு சொத்து வேறு நபருக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது என்றால் சரி.

அந்த வாடகைக்கு இருந்த நபரை ஒழிப்பித்து வாதி குடும்பத்துடன் தங்கினார் என்றால் சரியல்ல. வாதி குடும்பத்துடன் சென்னையில் இருந்த வந்து எனது அப்பாவுடன் கூட்டாக இருந்தார். 3 வருடம் கழித்து வழக்கு சொத்தை வாதிக்கு தாமசிக்க கொடுத்தார். வாதி புதிதாக வீடு கட்டும் வரை இருப்பதற்கு அனுமதி கொடுத்தார். வாசாஆ 8 ஆவணத்தில் மேற்படி அனுமதியையோ, சொத்து வாதியின் அனுபவத்தை ஒழிப்பிக்க சொல்லியோ குறிப்பிட்டு எந்த வாசகமும் உயிலிலோ , வாசாஆ 8 ஆவணத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக சொன்னார்.

வாய்மொழியாக எந்த தேதியில் சொன்னார் என்ற விவரத்தை எனது எதிர் வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன் 22.03.2014 ம் தேதி ஆகும். அன்றைய தேதியில் என்னுடைய தூண்டுதலின் பெயரில் வாதியை உடனடியாக காலி செய்ய சொல்லி எனது அப்பா கூறினார் என்றாலும் நான் வீட்டிற்கு வந்து பூட்டி சாவியை எடுத்துக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு வீட்டை பூட்டி சாவி எடுத்ததாக என்மீது காவல் நிலையத்தில் புகார் உள்ளது என்றால் இல்லை. உண்மையில் போலிசார் என்னை சமாதானபடுத்தி வீட்டை திறக்கவைத்தார் என்றால் சரியல்ல.

மறுபடியும் நானும், எனது அப்பாவும் வாதியுடன் பிரச்சனை செய்தோம் என்றால்

சரியல்ல. வாதி திரும்பவும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகள் மூலம் காவல் நிலையத்தல் உள்ள அதிகாரிகளை ஆதிக்கம் செய்ததால் நீதிமன்றத்தில் அ.வ.எண் 92/2016 என்ற வழக்கை வாதி தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்தது மட்டும் உண்மை. அந்த வழக்கில் எனது அப்பா வந்து ஆஜர் ஆகி எதிர் வழக்குரை தாக்கல் செய்த பின்பு சுகம் இல்லாமல் போனார் என்றால் சரி.

எனது அப்பா சுகம் இல்லாமல் வீட்டோடு இருந்ததால் .அவ.எண் 92/2016 வழக்கை வாதி நடத்தாமல் தவறுகைக்கு விட்டார் என்றால் சரியல்ல. வாசாஆ 8 ஆவணம் வழக்கு சொத்தை பொறுத்து வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பட்டிகை சொத்தில் வாதியின் குடும்ப அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். கழிவறை மற்றும் வாய்க்கால் ,குடிநீர் குழாய், அதற்கான குழாய்களை நான் துண்டித்துள்ளேன் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக வாதி வழக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு மூலத்திற்காக பொய் புகார் கொடுத்தார். தற்போது வரை நான் காவல் நிலையங்களில் ஆதிக்கம் செலுத்தி மேற்படி குழாய்களை சரிசெய்யவிடாமல் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே வாதி குடும்பத்தினர் அவர்களது இயற்கை உபாதைகள் கழிப்பதற்கும், குளிப்பதற்கும்., அவரது மகன் வீட்டிற்கு சென்று வருகிறார் என்றால் சரியல்ல. 20.05.2012 அன்று வாதிக்கு எதிரிடை அனுபவம் மூலம் உரிமை கிடைத்துவிடடடது என்றால் சரியல்ல. நானும் , எனது அப்பாவும் தெரிந்தே வாதியின் அனுபவத்தை அனுபவித்தோம் என்றால் சரியல்ல. அதனால் தான் சட்டரீதியாக ஒழிப்பிக்க நடவடிக்கை எடுக்காமல் வலுக்கட்டாயப்படுத்தி வாதியை வெளியேற்ற முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல.

காலங்கடந்து தாக்கல் செய்துள்ள எதிர் கோருரிமை வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் நேரடியாக அனுபவத்தை எடுக்கமுடியாது என்றாலும் டிரஸ்ட் தான் வாதியின் அனுபவத்தை எடுக்கமுடியும் என்றாலும் எனக்கு சட்டப்படியான உரிமை

எதும் இல்லை என்றாலும் சரியல்ல. வாதியின் ஸ்வாதினத்தில் இருந்தது ஒழிப்பிக்க எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பா இறந்து 3 வது நாளில் வாதியை வெளியேற பயங்கர பிரச்சனை செய்தேன் என்றாலும் ஆகையால் இந்த வழக்கை உடனடியாக தாக்கல செய்த நிர்பந்தம் ஏற்பட்டது என்றாலும் சரியில்ல. உயில் மூலமோ, வாசாஆ 8 ஆவணத்தின் மூலமோ வழக்கு சொத்தின் அனுபவம் தற்போது வரை கிடைக்கவில்லை என்றால் சரி. அதனால் எதிர் கோருரிமை வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

நான் கோரிய எதிர் கோருரிமை பரிகாரம் ஆனது வாதியின் அனுமதிக்கப்பட்ட அனுபவத்தன் மூலம் மட்டுமே கேட்டுள்ளளேன் என்றாலும் , வாசாஆ 8 ஆவணத்தின் மூலம் நான் கேட்கவில்லை என்பதால் எனக்கு நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது . வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என்றாலும் சரியல்ல. முன்னுக்கு பின் முரணாக சாட்சி அளிப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்ப்புடையதல்ல.